RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2421

OPEN ACCESS

# பெண்களின் வீரம்: இலக்கியவியலின் பொருத்தமின்மையில் வட்டார நடுகற்கள்

சு. சிவசந்திரகுமார் [அ, *]

[அ] தமிழ்முதுகலை & ஆய்வுத்துறை, தூயநெஞ்சக்கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்-635601, தமிழ்நாடு, இந்தியா.

# Women's Heroism: Regional Stone Monuments

S. Sivachandrakumar [a, *]

[a] Department of Tamil, Sacred Heart College (Autonomous), Tiruppattur-635601, Tamil Nadu, India

* Corresponding Author: sivadharsan83@gmail.com

Received: 07-01-2024
Revised: 22-03-2024
Accepted: 26-03-2024
Published: 05-04-2024

Check for updates

**ABSTRACT**

Both in autobiographical and biographical literature information about women's heroism are completely different. Researchers always celebrate the relevance of both the literature and ignores about its differences. If this situation continues, the research resources will weaken. Therefore, differences and deviations receive special attention. This article seeks to re-examine the anthropological and ethnographic views on women that indicate that the patriarchy that prevails in the public domain in the society is being reversed in the areas of ritual and morality. As far as monuments are concerned, patriarchy exists on the social and moral level. By establishing that there have been no major changes in women's valor in the past, the emancipated female body is tied to the social law and morality that patriarchy has created to reserve it for male valor. By making fun of the heroic events, it pushes back the progress of other women. This article compares this concept with the local regional stone monuments.

**Keywords:** Ritual, Stone Monuments, Women's Heroism, Society

## முன்னுரை

பெண்களின் வீரம் குறித்த செய்திகள் அகச்சான்றுகளான இலக்கியத்தில் ஒன்றாகவும் புறச்சான்றுகளான நடுகற்களில் வேறொன்றாகவும் அல்லது வேறொரு கோணத்திலும் பார்க்கப்படுவது சிக்கலாகிறது. அகப்புறச் சான்றுகளின் பொருத்தப்பாட்டைக் கொண்டாடும் ஆய்வாளர்கள் வேறுபாடுகளை ஒதுக்குவது அல்லது வேடிக்கைப்பார்ப்பது வாடிக்கையாகிறது. இந்நிலைத் தொடருமானால் மரபுநிலைத் திரிந்து பிரிதுபிரிதாகி ஆய்வுவளம் குன்றி வலுவிழக்கும். எனவே, வேறுபாடுகள் விலகல்கள் தனி கவனம் பெறுகின்றன. பெண்கள் குறித்து மானுடவியல், இனவரைவியல் தரும் கருத்துகள் "சமூகத்தில் பொதுவாழ்வுத் தளத்தில் (Public domain) ஓங்கி நிற்கும் ஆணாதிக்கம் சடங்கியல், ஒழுக்கநெறி ஆகியதளங்களில் தலைகீழ் மாற்றத்தைப் பெறுகிறது" (1998. ப. 131) என்னும் குறிப்புகளுக்கு இக்கட்டுரை மறுபரிசீலினை தேடுகின்றது. நடுகற்களைப் பொறுத்தவரையில் பெண்களுக்குப் பொதுவாழ்வுத் தளத்தில் இருப்பதைப் போலவே சடங்கியல், ஒழுக்கநெறி ஆகிய தளங்களிலும் ஆணாதிக்கம் இருக்கின்றது. நடுகற்களில் பெண்களின்வீரம் குறித்த பெருமாற்றங்கள் ஏதும் நிகழவில்லை என்பதை நிறுவுதன் மூலம் விடுதலைமனம் கொண்ட பெண்ணுடல் ஆணுக்கான வீரசாகசம் புரிந்தாலோ

நிறுவினாலோ அதனை ஒதுக்குவதற்கு ஆணாதிக்கம் தான் சார்ந்து உருவாக்கிய சமூகச்சட்டக ஒழுக்கப் பிறழ்வுகளைக் கட்டி விடுகின்றது. அதன்மூலம் வீரசாகச நிகழ்வுகளை எள்ளி நகையாடுவதன் மூலம் மற்ற பெண்கள் முன்வரும் நிலையினைப் பின்னோக்கிதள்ளி விடுகின்றது. இக்கருத்தினை வட்டார நடுகற்களுடன் ஒப்பிட்டுக் காண்பதனையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இலக்கிய பதிவுகளில் பெண்களின் வீரம்

வீரம் புறஇலக்கியம் சார்ந்தது. புறஇலக்கியங்கள் சூழ்நிலைச்சார்ந்த மாற்றங்களை உண்டாக்கவல்லது எனும்போது இயற்கையாகவே பெண்களுக்கு வீரம் உண்டு என்பதாக மூதின்முல்லைத் துறையை நினைவு கூர்கின்றது. குடிப்பெருமை வாயிலாகவே வீரம் கற்பிக்கப்படுகின்றது. மறக்குடியில் பிறந்த ஆடவருக்கே அன்றி மகளிருக்கும் வீரம் மிகுத்து காணப்படும் என்கிறது. இங்கே பெண்களின் வீரம் என்பதைக் காட்டிலும் குடிப்பெருமை மிகமுக்கியமானதாகிறது. இக்குடிப்பெருமை ஆணாதிக்கச் சமூகத்தில் எச்சமாக உள்ளது. இந்நிலைக்களைந்த வீரநிகழ்வுகள் இலக்கியபதிவுகளில் இல்லை. தாங்கிய ஒழுக்கத்து கிழவனை வணங்கத் தனிச்சட்டம் இயற்றுகிறன இலக்கண இலக்கியபதிவுகள்.

## நடுகற்களில் பெண்களின் வீரம்

தொடக்கக்கால நடுகற்களில் பெண்களின் உருவங்கள் காட்டப்படவில்லை. வீரர்கள் மற்றும் காணப்படுகின்றனர். பொ.ஆ. 8ஆம்நூற்றாண்டில் பெண்களை நடுகற்களில் காட்டுகின்றா வழக்கம் தொடங்கியுள்ளது. பெண்களின் உருவங்கள் சிறியதாக இருப்பதினால் அதன் விவரங்கள் தெளிவாகப் புலப்படுமாறில்லை. ஆனால் பிற்காலத்தில் சதியைக் குறிப்பிடுகின்ற அடையாளங்கள் காணப்படுகின்றன. சதிக்கற்கள் தனியாகவும், நடுகற்களுடன் இணைந்தும் கிடைக்கின்றன. இதை மகாசதிக்கல், மாசத்திகல், மாஸ்திகல், தீபாய்ந்த அம்மன் போன்று பலபெயர்களில் அழைக்கின்றனர். கன்னடத்தில் ‘தோள்கொடுத்தல்’ என்றும் ‘ஆசன் தோளுகல்லு’ என்றும் கூறுகின்றனர். இதனால் சதியைக் குறிக்க ஒருகையை மட்டும் காட்டுகின்ற அமைப்பு வந்தது. அதைத் தொடர்ந்து பெண்களின் கையில் எலுமிச்சம்பழம், சிறியகத்தி, அபயம் போன்ற முத்திரைகள் காட்டப்பட்டுள்ளன. (தி. சுப்பிரமணியன், தருமபுரி., நடுகற்களின் தோற்றமும் வளர்ச்சியும்., ஆவணம் இதழ் 29.ப. 281) நடுகற்களில் இடம்பெற்ற கண்ணகி வீரத்திற்காகக் கல்லாகச் சமையவில்லை மாறாகக் கற்பு ஒழுக்கம் என்னும் ஆணாத்திக்கச் சமூக கருத்தியல் கல் அந்தஸ்து கண்ணகிக்கு வழங்குகின்றது. இந்நிலையல்லாது பெண்கள் வீரசாகச நிலையெய்தும் காலங்களில் நடுகற்களாக இருக்கவில்லை. பெரும்பாலும் சதிக்கல்லாகின்றனர். அல்லது வீரபேறுடைய வீரர்களைத் தொட்டுத்தூக்கி வீடுபேறடைகின்றனர். ஆதிக்க கோடுகளை அதிகமாக வரைந்து அதனுள் வாழும் அனைத்து உயிர்களையும் புல் முதல் பூதம்வரை அடக்க நினைந்து கல்லாகிச் சமைந்து ஊர்காத்த பெருவீரனுக்குக் கற்குடம் கொடுத்து கடவுளாக்கப்படுகின்றனர். இந்நிலைமாறி அல்லது மாற்றத்திற்கு உண்டாக்கிய நடுகற்களில் பெண்கள் கம்பீரமாகக் குதிரைகளில் வலம்வரும் காட்சியமைந்த நடுகற்கள்அமையபெற்றுள்ளன. இந்நடுகற்கள் தமிழகத்தின் தென்பகுதிகளிலும் காண வடப்பகுதிகளில் அதிகம். இவ்வடப்பகுதி நடுகற்களின் சான்றுகளை அங்கீகரிக்கும் விதத்தில் இலக்கியச்சான்றுகள் அமையவில்லை. புறச்சான்றுகளைப் பொது வெளியாகக் கொள்ளலாம். பொதுவெளி அங்கீகரிக்கும் இத்தகையச் சூழலை இலக்கியங்கள் மறுத்தளிப்பது புலப்படுமாறில்லை. சமூகத்தில் பொதுவாழ்வுத் தளத்தில் (Public domain) ஓங்கி நிற்கும் ஆணாதிக்கம் சடங்கியல், ஒழுக்கநெறி ஆகிய தளங்களில் தலைகீழ் மாற்றத்தைப் பெறுகிறது எனும் மெய்மை பொய்யாகிப் போகுமாறு நடுகல் சான்றுகள் அமைந்துள்ளன. குதிரையேற்றத்தை நினைவூட்டும் பெண்நடுகற்கள் தேன்கனிக் கோட்டையிலிருந்து பெட்டமுகிலாளம் செல்லும் சாலையில் உள்ள சந்தனப்பள்ளி கிராமத்தில் இடதுபுறம் விவசாய நிலத்தின் வழியே பன்னியம்மன் ஏரிகோடி அமைந்துள்ளது. இப்பகுதியில்

வீடுபோன்ற அமைப்புடன் நடுகற்கள் அடங்கியதொகுப்பு அமைந்துள்ளது. இந்த நடுகற்களில் 13 மற்றும் 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.3 பெண்கள், 3 குதிரைகளின் மீது அமர்ந்துள்ள நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. 3 பெண்களின் வலது கரத்தில் சிறிய ஆயுதமும் இருப்பதாக நடுகல்லைக் கண்டறிந்த அறிஞர்கள் கருதுகின்றனர். அஃது ஆயுதமாகக் காணப்படவில்லை என்பது கட்டுரையாளர் கருத்து. இடது கரம் மேல் நோக்கி மடிந்த நிலையிலும் செதுக்கப்பட்டுள்ளது.

## நாட்டுப்புற மரபின் சார்பும் எதிர்கதையாடலும் உத்தி மரபும்

கும்மிப்பாடல்களில், யானை வரதப்பாருங்கம் மாயான அசஞ்சுவரத பாருங்கமாயானமேல இருக்கும் நம்ம முத்துமாரிக்கு அட்டிக மின்னலப் பாருங்கம்மா, குதுரை வரதபாருங்கம்மா குதுரகுதிச்சு வரதபாருங்கம்மாகுதுர மேல இருக்கும் நம்ம முத்துமாரிக்குக்கோ புரமின்னல பாருங்க என்பதாகப் பாடல் பயின்றுள்ளது. பரிபாடல் 10ஆம் பாடல்வையைக்கு உரையெழுதிய பரிமேலழகர் “நீரினது அழகு காண்டல் (27) முதலாக அமளிசேர்தல் ஈறாகச்சொல்லிய விளையாட்டுக்கள் அலர்வாய விழ்ந்தன்ன பருவத்துக் கற்புடைமகளிர் பரத்தையரன” அவற்றில் மாவின் திரளை ஊர்தலும் பிடியை உந்துதலும் பரத்தைக்கே உரியஎன்பார்” (பரிபாடல் மூலமும் உரையும், முனைவர் அ. மா. பரிமணம்., (உ.ஆ)., நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்., ப. 281). கோவில்பெண்டிரைக்குறிக்கும்போது ‘கோவில்பரிகலத்தாரில்’ என்றும் ‘ஐந்தாம் அடைவுக்குப்பரிகலம் ஆட்சி செய்கையில்’ என்றும் வரும் சொற்கள் கோவில்பெண்டிர்களுக்குப் பரிகலத்தார் என்ற பெயர் இருந்து வந்ததை உணர்த்தும். தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதியில் பரிகலம் என்பதற்கு கடவுளுக்கு முன்வைக்கும் உண்கலங்கள் என்றும் அதைப் பராமரிப்பவர் என்பதையும் ஏற்கலாம் என்பதாக கரு. இராஜேந்திரன் குறிப்பிடுவார். (கரு. இராஜேந்திரன்., புதுக்கோட்டை கல்வெட்டுகளில் பண்பாட்டுப் பதிவுகள் - தேவரடியார் ஒரு சிறப்புப்பார்வை., ஆவணம் இதழ்- 21 ப. 221) இவ்விடத்தில் ‘பரி’ என்பதற்கு குதிரை என்றொரு பொருளிருப்பதை நோக்குதல் நலம். மாரியம்மன்கதை ரேணுகாதேவி தொன்மத்துடன் சேர்த்துச்சொல்லும் போதுவானில் தோன்றிய கந்தர்வனின்மீது கொண்டவிருப்பம் காரணமாகக் கற்புடையமகளிர் அப்படிச் செய்தல் தவறு காரணமாக ரேணுகைத் தண்டனை பெற்றாள் தலைகள் மாறியதால் மாரியம்மன் என்றும் மாதங்கிய தால் மாதங்கி துணைத்தெய்வம் ஆனதாகவும் கருதுவர். இம்மாரியம்மனுக்கு எடுக்கப்படும் திருவிழாக்கும்மிகளில் தான்யானை வரதப்பாருங்கம்மாயான அசஞ்சு வரதபாருங்கமாயானமேல இருக்கும் நம்ம முத்துமாரிக்கு அட்டிகமின்னல பாருங்கம்மா, குதுரை வரதபாருங்கம்மா குதுர குதிச்சு வரதபாருங்கம்மாகுதுரமேல இருக்கும் நம்ம முத்துமாரிக்குக் கோபுரமின்னல பாருங்க என்பதாகப் பாடல் பயின்றுள்ளது. இப்பாடல் கற்புடைய கன்னிகைக்கான பாடலா அல்லது நாட்டார்மரபு, ரேணுயம்மனின் கற்பைக் கேலிசெய்து பாடுகிறதா என்பது அறிதற்கில்லை சமஸ்கிருதமயப்பட்ட தெய்வஉள்ளீட்டை நாட்டார்மரபு கடிந்தொதுக்கும். ஆனால் மாரியம்மனைப் பொருத்தவரையில் நாட்டார்மரபு மிகைக் கொண்டாட்டமாகவே கருதுகிறது. இருப்பினும் இப்படியொரு முரண்சான்று அதனுள் இருப்பதற்குஅதன் நவீன பண்பைக் காரணமாகக் காட்டலாம். நாட்டார்மரபு வெளி (space) குறித்து விவாதிக்க தூண்டுகிறது. இவ்வெளியானது அறிஞர் பெருமக்களால் நான்கு நிலைகளாகப் பாகுப்படுத்தப்படுகின்றது. அவைமுறையே, 1. கிளைச்சாதி- கிராமத்தெய்வம், 2. குலம் -கால்வழித்தெய்வம், 3. குடும்பம் - வீட்டுத்தெய்வம், 4. கூட்டம்- ஊர்த்தெய்வம் என்பனவாகக் கொள்ளப்படுகின்றன. இப்பாகுபாடுகள் கிராமங்களின் மிகப்பெரிய நிறுவனங்கள் எனக்கொள்ளலாம். இப்பகுப்பு முறை நான்கனுள் முதல் மூன்றும் செவ்வியல் பண்புபெற்றவையாகவும், இறுதியாக இடம்பெறும் ‘கூட்டம் - ஊர்த்தெய்வம்’ என்பன நவீனப் பண்புகொண்டதாகவும் வரையறுக்கலாம். ‘பெண்களின்விளிம்புநிலை இடத்தின் காரணமாக அவர்கள் எப்பொழுதும் எல்லைக்கு வெளியிலுள்ள குழப்பத்தோடு வடிந்துகரைந்து கலப்பவர்களாகவேகருதப்படக்கூடும். பெண்கள் இவ்வாறு குறியீட்டு ஒழுங்கின் வரம்பாகக் கருதப்படுவதால், எல்லா வரம்புகளின் பண்புகளைச் சீர்குலைப்பவர்களாக உள்ளே அல்லது வெளியே இல்லாதவர்களாக அறியப்படாதவர்களாகக் கருதப்படுவார்கள். இந்த இடத்தை (விளிம்பு

- வரம்பு) வைத்துத்தான் ஆண்பால் சமயங்களில் பெண்களை இருளின் குழப்பத்தின் பிரதி பிம்பங்களாக, பாபிலோனியதாசிகளாக நிந்திக்கிறது. சிலசமயங்களில் பரிசுத்தமான - உயர்வான இயற்கையின் பிரதி பிம்பங்களாக, கன்னியர் என்றும் தேவனின்தாய் என்றும் வணங்குகிறது. முதலாம் சித்திரிப்பில் எல்லைக் கோட்டிற்கு (வரம்பு) வெளியிலுள்ள குழப்பமான வனாந்திரமாகவும், இரண்டாம் சித்திரிப்பில் எல்லைக்கோட்டுக்கு உள்ளே உள்ளவர்களாகவும் பெண்களை நோக்குகிறார்கள். இவ்விரண்டு நிலைகளும் பெண்களின் அடிப்படையான உண்மை பற்றியதாக இல்லை என்று கூறத் தேவையில்லை' என்பதான ஜீலியா கிறிஸ்தெவா (பெண்ணியம் வரலாறும் கோட்பாடுகளும், சாராகாம்பிள் - டோரில்மோய்., தமிழில்ராஜ்கௌதமன். விடியல் பதிப்பகம் 2011.) கருத்துகளுடன் தமிழக பெண் நடுகற்கள் ஒத்துபோகும் தன்மையினால் அறியலாம்.

## முடிவுரை

புறச்சான்றுகளான நடுகள் தரவுகளுடன் ஒத்துசெல்லும் சான்றுகளாகப் பரிபாடல் உரை அமையவில்லை. நாட்டார் வழிபாடலும் அதை உறுதி செய்கின்றது. பெண்கொலைப் புரிந்த நன்னனைப் புலவர் மரபுபாடாமல் விடுத்தது என்பதை மறுக்கும் விதமாக ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம் மலைப்பகுதி காடக நல்லியில் பெண்கொலைக் கல் காணப்படுகின்றது. இத்தகைய அகப்புறச் சான்றுகளின் விடு பாடல்கள் எண்ணத்தக்கன.

## References


தி. சுப்பிரமணியன், தருமபுரி., நடுகற்களின்தோற்றமும்வளர்ச்சியும்., ஆவணம் இதழ் 29.ப. 281

பரிபாடல் மூலமும் உரையும், முனைவர் அ. மா. பரிமணம்., (உ.ஆ)., நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்., ப. 281.

கரு. இராஜேந்திரன்., புதுக்கோட்டை கல்வெட்டுகளில் பண்பாட்டுப் பதிவுகள் - தேவரடியார் ஒரு சிறப்புப்பார்வை., ஆவணம் இதழ்- 21 ப. 221



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License